**தலைப்பு 140 – மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 140 – மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 நவம்பர் 10 ஆம் திகதியன்று அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வுவை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148,149,150,152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கேற்பப் பேணப்படுதல், தயாரிக்கப்படுதல், நியாயப்பூர்வமாக சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்ற கணக்குகளையும் இணைக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயப்பூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்கான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேனுதல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,797.00 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 1,284.09 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அமைச்சிற்கான தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 512.91 மில்லியன் அல்லது 28.54 சதவீதம் சேமிப்புக்குள்ளானது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவினம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக, சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 223.42 | 189.12 | 34.30 | 15.35 |
| மூலதனம் | 1,573.58 | 1,094.97 | 478.61 | 30.42 |
| மொத்தம் | 1,797.00 | 1,284.09 | 512.91 | 28.54 |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 14001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதி கூடிய எல்லை | உள்ளவாறானது | அதி குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதி கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 14.00 | 10.76 | 6.00 | 6.51 | 30.00 | 21.14 |

**2.3 பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழான 02 வைப்புக் கணக்குகளின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 35.03 மில்லியனாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா.மில்லியன் |
| 6000/0000/00/0016/0082/000 | 35.02 |
| 6000/0000/00/0013/0088/000 | 0.01 |
| மொத்தம் | 35.03 |

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சினது 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் மேலே 1.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அவ்வவதானிப்புகளில் போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணியிராமை**

அமைச்சினால் பின்வரும் ஏடுகள் பேணப்பட்டிராததுடன், வாகனப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்பட்டிராமையும் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| | ஏடுகளின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்படவில்லை |
| (ஆ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்படவில்லை |
| (இ) | வாகனப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | நாளதுவரையாக்கப்படவில்லை |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

செலவின விடயங்கள் 11க்கான அதிகரித்த நிதியேற்பாட்டின் காரணமாக ஏற்பாடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கான நிகர நிதியேற்பாட்டில் 11 முதல் 25 சதவீத வரையிலாக அமைந்திருந்தது.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

விடய இலக்கம் 14001, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

2014 ஒக்டோபர் 30 ஆந் திகதி சேவையிலிருந்து விலகிய சிற்றூழியர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 107,896 ஆகும். 2017 யூன் 19 வரை இதனை அறவிடுவதற்கோ அல்லது தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவோ இல்லை.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.4.1 உள்ளகக் கணக்காய்வு**

(அ) 2015 டிசெம்பர் 09 ஆம் திகதிய DMA/AMC/2016/05/05 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு, அபிவிருத்திப் பணிகள் என்பவற்றிற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமாயினும், அமைச்சின் ரூபா 927 மில்லியன் நிர்மாண வேலைகளில் ரூபா 147 மில்லியனுக்கான 16 சதவீத நிர்மாண வேலைகள் மாத்திரமே கணக்காய்வு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுக் கூறு பிரதான உள்ளகக் கணக்காய்வாளருடன் 03 உத்தியோகத்தர்களைக் கொண்டிருந்தது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவைச் சக்திமிக்கதாக்குவதற்கு கணக்குகள் மற்றும் கணக்காய்வு தொடர்பான அறிவும் பயிற்சியுமுள்ள போதியளவு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 சொத்து முகாமைத்துவம்**

**பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு, சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்டன.

(i) 2016 மார்ச் 08 ஆந் திகதியன்று ரூபா 179,500 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் 2017 மே 25 ஆந் திகதியளவிலும் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ii) 2016 செப்டம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 4.5 மில்லியன் பெறுமதியிடப்பட்ட 02 வாகனங்கள் முறையே 2016 சனவரி 06 மற்றும் 2016 ஆகஸ்ட் 25 தொடக்கம் 2017 யூலை 31 வரை பழுதுபார்க்கப்படாதிருந்தன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட மிகை, குறைவுகள் மற்றும் ஏனைய சிபாரிசுகள் என்பன தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3.5 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|---|
| | | | ரூபா.மில்லியன் | |
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 702(3) | | 850.81 | அமைச்சானது சகல ஒப்பங்களினது 03 பிரதிகளிலும் கைச்சாத்திட்டு அவற்றுள் ஒரு பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், அவ்வாறு நடைபெறவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணங்கள் என்பன | 756,757 | 173.05 | வாகனங்கள் வருடாந்தம் நேரடியாக மெய்மையாய்வு செய்யப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1646 | | - | அமைச்சின் வாகனக் குழாமில் உள்ள 09 வாகனங்களுக்கு ஆண்டு முழுவதற்கும், வேறு 06 வாகனங்களுக்கு 05 முதல் 09 மாதங்களுக்கும் உரிய ஓட்ட அட்டவணைகளினதும் மாதாந்த பொழிப்புகளினதும் மூலப்பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |

## 3.6 வெளிநாட்டு உதவியுடனான செயற்திட்டங்கள்

### வெளிநாட்டு நிதியேற்பாட்டின் பயன்பாடு

வெளிநாட்டு உதவிக் கொடுக்கல் வாங்கல்களைக் கணக்கிலிடுதல் தொடர்பாக 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு மூலதனப் பணிப்பாளர் நாயகம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எனினும், 2015 டிசெம்பர் 29 மற்றும் 2016 மார்ச் 09 ஆகிய தினங்களில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட ரூபா 3,498,900 கூட்டுத் தொகையானது நேரடியாகவே அமைச்சினது பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டு அம்முழுத்தொகையும் மீளாய்வாண்டின்போது செலவழிக்கப்பட்டுமிருந்தது.

## 3.7 உள்ளூர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்குதல்

### பெருந்தோட்ட மனிதநேய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினது செயற்திட்டங்கள்

இவ்வமைச்சின் கீழ் அமுலாகும் பெருந்தோட்ட மற்றும் மனிதநேய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் 03 செயற்திட்டங்களது பணிகளுக்கு அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகள் கடைபிடிக்கப்படவில்லை. முன்னைய 03 ஆண்டுகளின்போதும் மற்றும் மீளாய்வாண்டின்போதும் அச்செயற்திட்டங்களுக்காக பெருந்தோட்ட மனிதநேய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு ரூபா 2.107.80 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச நிறுவனமாக உறுதி செய்யப்பட்டிராத இந்த நம்பிக்கைப் பொறுப்பிற்கு மீளாய்வாண்டின்போது ரூபா 850.81 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதனைவிட, ரூபா 343.13 மில்லியன் பொறுப்பும் உருவாகியிருந்தது. அதற்கமைய, மேற்படி 03 செயற்திட்டங்களுக்கும் மீளாய்வாண்டினது மொத்த நிதியேற்பாடாகிய ரூபா 1,518.00 மில்லியனில் 78.6 சதவீதம் மனிதநேய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கே விடுவிக்கப்பட்டிருந்தது. இப்பெருந்தோட்ட மனிதநேய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்குப் பணம் வழங்குகையில் அமைச்சிற்கும் அந்த நம்பிக்கைப் பொறுப்பிற்குமிடையே உடன்படிக்கை எதுவும் அமைச்சினால் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெருந்தோட்ட மனிதநேய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினூடாக நிறைவேற்றப்படும் செயற்திட்டங்கள் சம்பந்தமாக அமைச்சில் நிலவும் ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12.1(அ) வழிகாட்டலுக்கு அமைய, செயற்திட்ட ஒப்பந்தங்களுக்குரிய சகல நடவடிக்கைகளும் கண்காணிக்கப்படுவதற்கும் அதற்குச் சான்று பகர்வதற்கும் பொருட் கொள்வனவாளர் (அமைச்சு) பொறுப்பாக இருப்பதுடன், வீடுகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் வழங்கப்பட்ட சேவைகளும் ஆற்றிய வேலைகளது தன்மையும் சுயாதீனமாக பரிசீலிக்கப்பட வேண்டும். எனினும், பெருந்தோட்ட மனிதநேய அபிவிருத்தி நிறைவேற்றிய ஒப்பந்தங்களுக்குரிய சகல நடவடிக்கைகளும், அதாவது, உசாத்துணைச் சேவை வழங்குதல், ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்தல், கண்காணிப்பு போன்றவை சம்பந்தமாக அவ்வாறு நடைபெறாதிருந்தமை தெரிவுச் செவ்வைகளின் மூலம் அவதானிக்கப்பட்டன.

(ii) பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவை மற்றும் பொருட் கொள்வனவு வழிகாட்டல் 3.9.1 க்கமைய ரூபா 02 மில்லியனுக்கு மேற்பட்ட

ஒப்பந்தங்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படலாகாது. அத்துடன், குறிப்பிட்ட காலப்பகுதியின்போது 3 க்கு மேற்பட்ட ஒப்பந்தங்களில் சங்கங்கள் ஈடுபடலாகாது. எவ்வாறாயினும், பெருந்தோட்ட மனிதநேய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் மூலம் தோட்ட ஊழியர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென புதிய வாழ்வாதார தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான வழிகாட்டல் கைநூலில் குறிப்பிடப்பட்டதன் காரணமாக அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டலையும் மீறிச் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) நலன்பெறுநர்களிடமிருந்து கடனைப் மீளப் பெறுதலும் திறைசேரியில் அவற்றை செலவு வைத்தலும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புதிய வாழ்வாதார வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை அமுலாக்குவதற்கு ஏற்புடையதான வழிகாட்டல் கைநூலின் 9.2 ஆம் பந்தியின் பிரகாரம் நலன்பெறுநர்களிடமிருந்து கடனைத் மீளப் பெறுதல் தோட்ட வீடமைப்பு செயற்திட்டங்கள் ஆரம்பித்து 03 மாதங்களாகியதன் பின்னர் ஆரம்பிக்கப்பட வேண்டும். 2011 முதல் 2016 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரை புதிய வாழ்வாதார தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 435.09 மில்லியன் மற்றும் பசுமைப் பொன் செயற்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 7.85 மில்லியன் என மனிதநேய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு அமைச்சு கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தது. அதில் மீளப் பெறவேண்டிய கடனானது புதிய வாழ்வாதார தோட்ட வீடமைப்பிலிருந்து ரூபா 232.34 மில்லியனாகவும் பசுமைப் பொன் கடனின் பொருட்டு ரூபா 4.11 மில்லியனாகவும் இருத்தல் வேண்டும். எனினும், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுத் திறைசேரியில் செலவு வைக்கப்பட்டிருந்த தொகை அத்தினத்தில் அறவிடப்பட வேண்டியிருந்த தொகையின் 4.29 சதவீதமான ரூபா 10.15 மில்லியன் மாத்திரமே. அதற்கமைய, பொதுவாகப் பார்க்குமிடத்து கடன் அறவிடப்படுவதில் முறையான கண்காணிப்பில்லாமையால் நிலைமை நலிவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மேற்படி (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டலின் 9.2 ஆம் பந்தியின் பிரகாரம் கடன் அறவீடு மாதாந்தம் பெறப்பட்டு அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் அரசாங்க திரட்டு நிதியில் செலவு வைக்கப்படுவதற்கு நேரடியாகவே அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்படுவது தோட்ட முகாமைத்துவத்தினதும் தோட்ட ஊழியர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்களதும் பொறுப்பாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015,2016 ஆம் ஆண்டுகளின்போது முறையே ரூபா 23.26 மில்லியன் மற்றும் ரூபா 37.75 மில்லியன் என்பன அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) செயற்திட்ட நடவடிக்கைகள் இடை நடுவே கைவிடப்படுதல்**

புதிய வாழ்வாதார வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 570 வீடுகளது வேலை தொடர்ந்து நடைபெற்றவாறிருந்தது. அதில் 74 வீடுகள் முடிவடையாதிருந்தன. அந்த 74 வீடுகளுள் கேகாலை வலயத்தில் ஐலா–ஐலா வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 45 வீடமைப்புக் கூறுகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. அதற்கான கொடுப்பனவுகள்

வழங்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், ரூபா 5.85 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, எஞ்சிய 29 வீடுகளுக்கும் வழங்கப்பட்ட ரூபா 2.65 மில்லியன் வேறு செயற்திட்டங்களுக்கெதிரே எதிரீடு செய்யப்பட்டதாகப் பதில் வழங்கப்பட்டிருந்தபோதும், அதனை உறுதி செய்வதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(உ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

----------------------------------------------------------------------------

தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் என்பவற்றிற்காக 2016 ஆம் ஆண்டின்போது 26 வேலைகளுக்கு 20 சதவீத முற்பணமாக ரூபா 11.88 மில்லியன் பெருந்தோட்ட மனிதநேய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்கப்பட்டிருந்தது. 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அச்செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) பெருந்தோட்ட மனித நேய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் மூலம் நிறைவேற்றப்படும் செயற்திட்டங்களுக்கு அமைச்சு கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதலும் ஏடுகளைப் பேணுதலும்**

----------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின்போது பெருந்தோட்ட மனிதநேய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினது பெயரில் வரையப்பட்ட ரூபா 653 மில்லியன் பெறுமதியான 708 காசோலைகள் பெறுநரது அடையாளத்தை உறுதிசெய்து நேரடியாகவே பெறுநருக்கு வழங்கப்படாது அமைச்சின் அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

(ii) பெருந்தோட்ட மனிதநேய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் பொருட்டு அபிவிருத்திப் பிரிவால் பெறப்பட்ட காசோலைகள் மீண்டும் குறித்த நபர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்போதும் ஒப்படைக்கப்படும்போதும் அவர்களது அடையாள அட்டை இலக்கமும் கையெழுத்தும் அடங்கலாக சகல விபரமும் அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) மூன்று மாத நடவடிக்கைகள் தெரிவுச் செவ்வைக்குள்ளானபோது 378 காசோலைகளின் 99 சதவீதமான 375 காசோலைகளுக்கு 264 ஆம் நிதிப்பிரமாணத்தின்படி பெருந்தோட்ட மனிதநேய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து பற்றுச்சீட்டுக்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிப்பிரமாணம் 501 (இ) மற்றும் 502(ஆ) என்பனவற்றின் பிரகாரம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் கடனுக்குரிய பகுதிவாரியான கொடுப்பனவுகளைக் கணக்கிலிடுதல் மற்றும் நிபந்தனைப்படி முழுத் தொகையையும் மீள அறவிடுதலை உறுதிப்படுத்தல், பெற வேண்டிய தொகையைத் தாமதமின்றிச் சேகரிப்பது மற்றும் குறித்த பணிகளின்போது திருப்திகரமான முன்னேற்றத்தை அடைதல் போன்றன சம்பந்தமாக மேற்பார்வை செய்வதற்கான சகல கொடுப்பனவுகளையும் குறித்துக் கொள்வதற்கான ஏடுகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 செயலாற்றல்

### (அ) போதியளவு நிறைவேறாத பிரதான பணிகள்

அமைச்சானது பிரதான பணிகளை நிறைவேற்றியிராததுடன், அது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு,

மண்சரிவு காரணமாக இடம் பெயர்ந்த நபர்களுக்கு வீடுகளை வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டுமாயினும், மாவனெல்லை, புலத்சிங்கள, குடலிகம மண்சரிவுகளுக்கான வீடுகளுக்கு 2017 யூலை வரை வீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஏனைய அவதானிப்புகள்

(i) புதிய வாழ்வாதார தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2011 முதல் 2016 வரை நிறைவேற்றப்படவிருந்த புதிய வாழ்வாதார வீடுகளது எண்ணிக்கை 1354 ஆகும். 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அவர்கள் நிறைவேற்றிய வீடுகளது எண்ணிக்கை 1126 ஆகும். அதற்கமைய, செயல் முன்னேற்றமானது 83.16 சதவீதம் என அவதானிக்கப்பட்டது.

(ii) பசுமைப் பொன் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் (Green Gold Housing Programme) கீழே குறிப்பிட்டவாறு 03 வீடமைப்புச் செயற்திட்டங்களின் கீழ் 15,000 வீடுகளை அமைப்பதற்கு எண்ணியபோதும், அதன் செயல் முன்னேற்றம் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பின்வருமாறு அமைந்திருந்தது.

- பசுமைப் பொன் வீடமைப்புத் திட்டத்தினது செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் கீழ் 2015 முதல் 2020 வரை 6,500 வீடுகளை ஆரம்பித்து நிறைவேற்றுவதற்கு எண்ணியிருந்ததுடன், 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் இத் திட்டத்தின் கீழ் 1430 வீடுகளே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதில் 937 வீடுகள் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவடைய வேண்டுமாயினும், 513 வீடுகள் மாத்திரமே முடிவடைந்திருந்தன. செயல் முன்னேற்றம் 54.75 சதவீதமாகும்.

- இந்திய உதவியுடனான வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2016 தொடக்கம் 2020 வரை 4,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு எண்ணியிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் அதில் 1,100 வீடுகளை ஆரம்பிப்பதற்கு முயன்றபோதும் 2017 யூலை மாதமளவில் 134 வீடுகள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் அந்த அதிகார சபை வாயிலாகவும் வங்கிக் கடன் வாயிலாகவும் 2016 முதல் 2020 வரை 4,500 வீடுகளை நிர்மாணிப்பதற்கு எண்ணியிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் 400 வீடுகளை நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், நிர்மாண வேலை எதுவுமே நடைபெறவில்லை.

**3.9 இழப்புகளும் நட்டங்களும்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த வாகனமொன்று 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதியன்றுவிபத்துக்குள்ளானமை தொடர்பாக 103(1)(ஆ), 104(3), 104(4) ஆம்நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதனைப் பழுதுபார்ப்பதற்கான மதிப்பீடு ரூபா 1.03 மில்லியனாகும். அவ்வாறே, அந்த வாகனம் 2017 ஆகஸ்ட் 21 வரை தனியார் கராஜ் ஒன்றில் இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**3.10 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுயவேலை வாய்ப்பை வழங்கும் நோக்குடன் தோட்டங்களிலுள்ள இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் கடன் வழங்குவதற்கான சுழற்சி நிதியம் ஒன்றை அமைப்பதற்கு அரச வங்கி ஒன்றில் ஒரு மில்லியன் ரூபாவை வைப்பிலிட 2000 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்ட அமுலாக்கல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வங்கிக்கும் அமைச்சுக்குமிடையேயான உடன்படிக்கைப் பிரகாரம் வங்கியின் சட்டங்கள், விதிகள் என்பவற்றுக்கமைய பிணையுடன் கடன் வழங்கப்பட வேண்டும். இந் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதலாக 2010 வரை வழங்கப்பட்ட மொத்தக் கடன் ரூபா 9.21 மில்லியன் ஆகும். 2013 சனவரி 30 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 4.22 மில்லியனாகும். அதாவது, வழங்கப்பட்ட கடனில் 46 சதவீதமாகும். அதற்கமைய, கடன் அறவீடு சம்பந்தமாக வங்கியினது முயற்சி போதுமானதாக அமையாததுடன் அமைச்சு முறையான மேற்பார்வையைச் செய்திராமையும் அவதானிக்கப்பட்டது.

(ii) இரண்டாவது கட்டத்தின் கீழ் 2016 சனவரி 26 ஆந் திகதியில் உள்ளவாறான ரூபா 8,758,443 மீதி தொடர்பாக வங்கியுடன் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படிருந்தது. அதற்கமைய, நலன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட கடனை அறவிடுவதற்கு முறையான மேற்பார்வையை மேற்கொள்ளக்கூடியவாறு 501(இ) மற்றும் 502(ஆ) நிதிப்பிரமாணங்களின்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.11 மனிதவள முகாமைத்துவம்**

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | மிகையாக உள்ள எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 13 | 03 | - |
| (ii) | ஆரம்ப நிலை | 24 | 19 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 294 | 209 | 85 | - |
| (iv) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (v) | ஏனைய (சமயாசமய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | | --------- | -------- | -------- | -------------- |
| | மொத்தம் | **338** | **243** | **96** | **01** |
| | | ===== | ===== | ==== | ==== |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்படி வெற்றிடங்கள் நிலவும் பதவிகளுள் சிரேஷ்ட மட்டத்தில் நிலவும் 02 வெற்றிடங்களுள் உள்ளடங்கிய பொறியியல் பணிப்பாளர் பதவியும் ஆரம்ப நிலைப் பதவியில் 03 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளும் இருந்தன. இவற்றை நிரப்பாமையால் இவ்வமைச்சின் நிர்மாண வேலைச் செயற்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டில் முறையாக மேற்பார்வை செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. 03 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளுக்கு 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதியன்று ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.